14th March 1966]

Sub-Registrar's Office

* 282 *Q.*—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the places in North Arcot district in which offices of Sub-Registrars are proposed to be opened in 1965–66?

கனம் திரு. கோ. பூவராகன்: 1965-66-ம் ஆண்டில் துணைப் பதிவாளர் அலுவலகம் எதையும் புதிதாக ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஒன்றுமில்லை.

திரு. எஸ். முருகையன்: ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்? சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால் பரிசீலனை செய்து தேவையில்லை என்று சொல்லி விடுகிறார்கள். எத்தனை கிராமங்கள் சேர்ந்திருந்தால் அல்லது எவ்வளவு ஜனத்தொகை இருந்தால் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. கோ. பூவராகன்: ஜனத்தொகையைப் பற்றி ஒன்றும் இல்லை. போக்குவரத்து வசதி இருக்க வேண்டும். போதுமான அளவு வருமானம் வருமா என று பார்க்க வேண்டும். அந்த இடத்தில் ஒரு உணவு விடுதி இருக்க வேண்டும் போலீஸ் நிலையம் இருக்க வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: அமைசசர் அவர்கள் நாலைந்து நாட்களுக்கு முன்பு கூட இதே பதிலைத்தான் சொன்னார்கள். குறைந்தபட்சம் எவ்வளவு வருமானம் இருந்தால் அந்த இடத்திலே ஒரு ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஆரம்பிக்கப்படும் என்பதற்கு நான் திருப்தி அடையும் அளவுக்குப் பதில் சொல்லுவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: ஒரு இடத்தில் பத்திரப் பதிவு அலுவலகத்தைத் திறக்க வேண்டுமென்றால் ஆண்டு ஒன்றுக்கு மூவாயிரம் பத்திரங்களாவது பதிவாக வேண்டும். குறைந்தது பத்தாயிரம் அல்லது பதினைந்தாயிரம் ரூபாய் வரை வருமானம் வருவதாக இருக்க வேண்டும்.

Pay of Sub-Registrars

*283 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal to raise the scales of pay of Sub-Registrars of the Registration Department; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) & (இ) இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: சப்-ரிஜிஸ்ட்ரார்கள் செய்யும் வேலை அதிகப் பளுவானது. அந்த உத்தியோகம் பொதுவாக பலரைக் கவருவதில்லை. ஆகவே, அவர்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்துவது பற்றிப் பரிசீலனை செய்யப்படுமா?

[14th March 1966

கனம் திரு. கோ. பூவராகன் : பரிசீலனை செய்யப்பட்டு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : அவர்களுடைய சங்கங்களிலிருந்து ஸ்கேலை அதிகரிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தனவா ? பரிசீலனை செய்யப்பட்டதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : கோரிக்கைகள் வந்தன. கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு அதிலே முடிவு எடுப்பது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

'Son Et Lumiere' Programme

* 284 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to extend the programme styled 'Son Et Lumiere' to the historic temples in the State for explaining the history behind those monuments vividly to tourists ; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இந்திய அரசாங்கச் சுற்றுப் பயணத் துறையினரால் ஏற்படுத்தப்பட்ட இந்திய சுற்றுப்பயண கூட்டு நிறுவனம் மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயிலில் " சான்-ஏ-லூமியர் " எனப்படும் கலை நிகழ்ச்சியை நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(இ) அதற்கான ஏற்பாடுகள் இந்திய சுற்றுப் பயணக் கூட்டு நிறுவனத்தினால் வகுக்கப்பட்டு வருகின்றன.

திரு. வை. சங்கரன் : அந்தக் கலை நிகழ்ச்சியானது புதிதாகவும் முற்றிலும் வினோதமாகவும் இருப்பதால் அது என்ன மாதிரி காண்பிக்கப்படுகின்றன ? ஒலி ஒளி இரண்டும் கலந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இது பெரும்பாலும் சரித்திர, கலாசார முக்கியத்துவம் பெற்ற புராதன இடங்களைப் பற்றியதாக இருக்கும். அந்த மாதிரி இடங்களில் முன்கூட்டியே ஒலி, ஒளி அமைப்புகளுடன், முன்பு எவ்வாறு நடந்திருக்கும் என்பதை இப்போது நடப்பது போல் காட்டுகிற நிகழ்ச்சி. பேச்சும் விளக்கமும் அதற்குத் தகுந்தவாறு அமைக்கப்பட்டிருக்கும்.

'பஸ்' நிலையம், சிதம்பரம்

* 285 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் நகரசபை மூலம் சிதம்பரத்தில் இரண்டாவது பஸ் ஸ்டாண்டு கட்ட வேண்டுமென்று கோரி அரசாங்கத்திற்கு மனுக்கள் ஏதேனும் அண்மையில் வந்துள்ளனவா ?